ஆய்வுச்சுருக்கம்

‘கணியன் பூங்குன்றனாரின் பாடலில் சமண விழுமியங்கள்’ என்ற தலைப்பில் அப்பாடலில் இடம் பெற்றுள்ள உயிரின் பிறவிச்சுழற்சி சமநோக்கு நிலையாமை வினைக்கோட்பாடு போன்ற கருத்துக்கள் பல்வேறு நூல்களில் இருந்து மேற்கோள்கள் சுட்டிக் காட்டி விளக்கம் அளிக்கப் பெறுகின்றன.

கணியன் பூங்குன்றனாரின் பாடலில் சமண விழுமியங்கள்

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தாலுக்காவில் மகிபாலன்பட்டி முன்பு பூங்குன்றம் என்று வழங்கப் பெற்றது. புறநானூற்றில் இடம் பெறும் கீழ்க்கண்ட பாடல் இவ்வூரைச் சார்ந்த கணியன் பூங்குன்றனரால் இயற்றப் பெற்றது. இவரது காலம் கி.மு. ஆறாம் நூற்றாண்டு எனக் கருதப் பெறுகின்றது. முற்காலத்தில் இப்பகுதியில் சமணம் தழைத்திருந்தது. சில வருடங்களுக்கு முன்னர் ஒரு சமணச் சிற்பமும் அகழ்ந்தெடுக்கப் பெற்றுள்ளது. இப்பாடலில் சமண சமயத்தின் பற்பல விழுமியங்கள் தென்படுவதால் சமணத் தாக்கத்தால் கருத்துக்கள் எடுத்துரைக்கப் பெற்றிருக்கக் கூடும் எனக் கருதுவதற்கு வாய்ப்புண்டு.

**“யாதும் ஊரே; யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன
சாதலும் புதுவது அன்றே;
வாழ்தல் இனிது என மகிழ்ந்தன்றும் இலமே
முனிவின் இன்னாது என்றலும் இலமே
மின்னோரு வானம் தண்துளி தலை ஆனாது
கல்பொருது இரங்கும்வ மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம் ஆதலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே**

- 192 புறநானூறு

பிறவிச் சுழற்சியில் உழன்று கொண்டு இருப்பது ‘சம்சாரம்’ என்று கூறப் பெறுகின்றது. இவ்வாறு சுழன்று கொண்டு இருப்பதை “பரிவர்த்தனை“ என்பர். இந்த பரிவர்த்தனை எந்த உயிர்களுக்கு கிடைக்கிறதோ அவற்றினை ‘சம்சாரி உயிர்கள்’ என்பர். இப்பரிவர்த்தனையில் ஐவகை உள்ளன. அவை திரவிய ஷேத்திர கால பவ பாவ பரிவர்த்தனைகளாவன.

ஓர் உயிர் உண்மையில் எல்லா புத்கலங்களையும் அனுபவித்து கொண்டு வந்துள்ளது. அதாவது அவ்வுயிர் சுற்றாத இடம் இல்லை. சுவைக்காத பொருள் இல்லை. துய்க்காத இன்பமும் இல்லை. வரம்பற்ற காலங்கள் முதலாக புத்கல பரிவர்த்தனை வடிவில் பிறவிச் சுழற்சியில் உழன்று கொண்டே இருந்துள்ளது. உலகத்தில் எல்லா பிரதேசங்களிலும் இந்த உயிர் பிறக்காத இடம் இல்லை. இவ்வாறாக பிறந்தும் இறந்தும் சுற்றிக் கொண்டே இருக்கின்றது. மேலும் அவ்வுயிர் காலச் சக்கரத்தின் எல்லா சமயங்களிலும் அநேக முறை பிறப்பதும் இறப்பதுமாக உழல்கிறது.

இதுவரை பிறந்த பிறவிகளில் ஓர் உயிர் இருந்திடாத இடமும் இவ்வுலகினில் இல்லை என்பதையும் அந்த உயிரின் தொடர்பு இல்லாதவரும் இல்லை என்பதையும் **“யாதும் ஊரே; யாவரும் கேளிர்”** எனும் அப்பாடலின் முதல் வரி உணர்த்துகின்றது.

இக்கருத்தினை ஒட்டி பட்டினத்தடிகள் வழிமொழிந்த ஒரு பாடல் சைவ சமய நூலான திருக்கழுமல மும்மணிக்கோவையிலும் காணக் கிடைக்கின்றது.

“யான்ஒன்று உணர்த்துவன் எந்தை மேல்நாள்
அகில லோகமும் அனந்த யோனியும்
நிகிலமும் தோன்றநீ நினைந்தநாள் தொடங்கி
எனைப்பல யோனியும் நினைப்புஅரும் பேதத்து
யாரும் யாவையும் எனக்குத் தனித்தனித்
தாயர் ஆகியும் தந்தையர் ஆகியும்
வந்துஇலாதவர் இல்லை யான்அவர்
தந்தையர் ஆகியும் தாயர் ஆகியும்
வந்து இராததும் இல்லை முந்து
பிறவா நிலனும் இல்லை அவ்வயின்
இறவா நிலனும் இல்லை பிறிதுஇல்
என்னைத் தின்னா உயிர்களும் இல்லையான் அவை
தம்மைத் தின்னாது ஒழிந்ததும் இல்லை அனைத்தே”

--8-20 வரிகள் 7 திருக்கழுமல மும்மணிக் கோவை

“ஸோ நத்தி இஹோகாஸோ லோஏ வாலக்ககோடிமித்தோவி
ஜம்மணமரணாபாஹா அணேகஸோ ஜத்த ந ய பத்தா ”

- 512 ஸமணஸுத்தம்

இவ்வுலகில் உயிர் பலமுறை பிறந்திறந்து ஜனன மரண துன்பங்களை அனுபவிக்காத மயிரிழை அளவு இடமும் இல்லை என ஸமணஸுத்தம் உரைக்கிறது.

“தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன
சாதலும் புதுவது அன்றே”

எனும் அடுத்த வரிகள் ஒருவனுடைய வாழ்வின் ஏற்றத்திற்கும் இறக்கத்திற்கும் அவனது வினைகளே காரணமாவன. அதற்காகப் பிறரை நோதலும் தணிதலும் தவிர்த்தல் நன்றாகும். சாதலும் புதிதன்று; கருவில் தோன்றிய நாளே இறுதி நாளும் முடிவானது; இவ்வாறாக வினைக் கோட்பாட்டையும் சமநோக்குச் சிந்தனையையும் நிலையாமையையும் ஒருங்கே சுட்டுகின்றன.

இதனையே பின் வரும் திருக்குறளும் நாலடியார் அறநெறிச்சாரம் மற்றும் மேருமந்தர புராணம் பாடல்களும் புலப்படுத்துகின்றன.

“பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்”

- 505 திருக்குறள்

“நல்நிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலை கலக்கிக் கீழ்இடுவானும் நிலையினும்
மேல்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான்”

-248 நாலடியார்

“தன்னில் பிறிதுஇல்லை தெய்வம் நெறிநிற்பில்
ஒன்றானும் தான் நெறி நில்லானேல் - தன்னை
இறைவனாச் செய்வானும் தானேதான் தன்னைச்
சிறுவனாச் செய்வானும் தான்”

-77 அறநெறிச்சாரம்

“தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான் செய்த வினைப்பயன் துய்த்தலால்
தானே தனக்குக் கரி”

-150 அறநெறிச்சாரம்

“தன்உள்ளே நின்று தன்னைத் தான் நரகத்துஉள் உய்க்கும்
தன்உள்ளே நின்று தன்னைத் தான் துறக்கத்து வைக்கும்
தன்உள்ளே நின்று தன்னைத் தான் தடுமாற்றுஉள் உய்க்கும்
தன்உள்ளே நின்று தன்னைத் தான் சித்தி அகத்து வைக்கும்”

-976 பிறவி முடிச் சருக்கம் மேருமந்தர புராணம்

“வாழ்தல் இனிது என மகிழ்ந்தன்றும் இலமே
முனிவின் இன்னாது என்றலும் இலமே”

எனும் அடுத்த இருவரிகள் வாழ்வு இனிது என்று உவப்பு அடைவதும் வெறுப்பு வந்த விடத்து துன்புறுவதும் இல்லை என்னும் சமநோக்குத் தன்மையை வலியுறுத்திக் கூறுவன. சமதாபாவம் கொண்டிருந்தால் வாழ்வில் ஏற்படக்கூடிய ஏற்ற இறக்கங்கள் மனதைப் பாதிக்க மாட்டா.

“மின்னோரு வானம் தண்துளி தலை ஆனாது
கல்பொருது இரங்கும்வ மல்லல் பேர்யாற்று
நீர்வழிப் படூஉம் புணைபோல் ஆருயிர்

முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியின் தெளிந்தனம்……”

மின்னலுடன் மழை குளிர்ந்த துளியைப் பெய்வதால் அமையாது; கல்லில் நீர் பட்டு உண்டாகும் ஒலியொடு ஆற்றுநீரின் வழியே மிதவை (படகு) செல்வதைப் போல அரிய உயிர் ஊழின் (வினைப்பயன்) வழியே பயணிக்கும் என்று ஞானியர் நற்காட்சியின் மூலம் தெளிந்தனர் என்பது இப்பாடலின் கருத்து.

“………..ஆதலின் மாட்சியின்
பெரியோரை வியத்தலும் இலமே;
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே”

மாண்பு மிக்க பெரியோரைக் கண்டு வியத்தலும் சிறியோரைக் கண்டு வெறுத்து இகழ்தலும் இல்லாத பண்பு நயம் கொள்ளுதல் நலம் பயக்கும்.

இவ்வாறு உயிரின் பிறவிச் சுழற்சி வினைக்கோட்பாடு நிலையாமை சமநோக்கு போன்ற சமண விழுமியங்கள் இப்பாடல் முழுதும் விரவி வந்துள்ளமை தெள்ளத் தெளிவாகக் காணப் பெறுகின்றது.

துணை நூற்பட்டியல்:
புறநானூறு - பல்வேறு ஆசிரியர்கள்
சருவார்த்த சித்தி - ஆச்சாரியார் ஸ்ரீ பூஜ்யபாதர்
(ஹிந்தி - பண்டிதர் பூல்சந்திர சாஸ்திரியார் தமிழ் - க.வி. அஜிததாஸ்)
திருக்கழுமல மும்மணிக் கோவை - பட்டினத்தடிகள்
ஸமணஸுத்தம் பல்வேறு ஆசிரியர்கள்
திருக்குறள் - திருவள்ளுவர்
நாலடியார் - சமண முனிவர்கள்
அறநெறிச்சாரம் - முனைப்பாடியார்
மேருமந்தர புராணம் - வாமன முனிவர்

முனைவர் நீலகேசி.ஜெ.
சமணவியல் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சேப்பாக்கம்
சென்னை
600005
9444903123